மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.06/2025
அ.வ.எண்.173/2024

1. ராமு
2. அழகேசன் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. கட்டியண்ணன்
2. மயிலியம்மாள்
3. காளியப்பன்
4. பழனிசாமி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 03.03.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.K.அர்ஜுனன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.துரைசாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், இருந்து வந்த இம்மனுவில் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறை விதிகள், விதி 28(2) மற்றும் பிரிவு 151 ன் கீழ் இ.ம.எண்.03/2024 என்ற மனுவில் 19.03.2025 ம் தேதியன்று போடப்பட்டுள்ள வாய்தா தேதியை இன்றோ அல்லது அருகாமையிலுள்ள தேதிக்கோ முன்கொணர்ந்து உத்தவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

வாதிகள்/மனுதாரர்களால் விளம்புகை, விளைவுறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு, நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு, அறிக்கை தாக்கல் செய்து, மேற்படி அறிக்கைக்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்காக எதிர்வரும் 19.03.2025 ம் தேதியில் வழக்கு நாளிடப்பட்டுள்ளது. மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில்

காட்டப்பட்டுள்ள வழித்தடத்தை எதிர்மனுதாரர்கள் தடுத்து மனுதாரர்களின் அனுபவத்திற்கு தொடர்ந்து இடையூறு செய்து வருவதால் மேற்படி வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.03/2024 ல் விசாரணை நடத்துவதற்காக வழக்கையும், அதனுடன் இணைந்துள்ள இடைநிலை மனுக்களையும் முன்னொரு தேதிக்கு முன்கொணர்வு செய்ய வேண்டி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) 3ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 1, 2, 4ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனு பொய். சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர்கள் தடவழி பாதை என கூறும் பகுதி எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலத்தின் பகுதியாகும். ஆணையர் அறிக்கைக்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனைக்கு நீதிமன்றம் செய்யும் உத்தரவிற்கு பின்னரே இ.ம.எண்.03/2024 ன் மீதான விசாரணையை எதிர்கொள்ள எதிர்மனுதாரர்கள் தயாராக உள்ள நிலையில், மனுதாரர்கள் அவசரமாக இம்மனுவை தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை. மனுதாரர்கள் தவறான சங்கதிகளை கூறி மனுதாக்கல் செய்துள்ளனர். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் வாதிகள்/மனுதாரர்களால் விளம்புகை, விளைவுறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக

வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு, நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு, அறிக்கை தாக்கல் செய்து, மேற்படி அறிக்கைக்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்காக எதிர்வரும் 19.03.2025 ம் தேதியில் வழக்கு நாளிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள வழித்தடத்தை எதிர்மனுதாரர்கள் தடுத்து மனுதாரர்களின் அனுபவத்திற்கு தொடர்ந்து இடையூறு செய்து வருவதால் மேற்படி வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.03/2024 ல் விசாரணை நடத்துவதற்காக வழக்கையும், அதனுடன் இணைந்துள்ள இடைநிலை மனுக்களையும் முன்னொரு தேதிக்கு முன்கொணர்வு செய்ய வேண்டி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் தடவழி பாதை என கூறும் பகுதி எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலத்தின் பகுதி என்றும், ஆணையர் அறிக்கைக்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனைக்கு நீதிமன்றம் செய்யும் உத்தரவிற்கு பின்னரே இ.ம.எண்.03/2024 ன் மீதான விசாரணைணை எதிர்கொள்ள எதிர்மனுதாரர்கள் தயாராக உள்ள நிலையில், மனுதாரர்கள் அவசரமாக இம்மனுவை தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும், மனுதாரர்கள் தவறான சங்கதிகளை கூறி மனுதாக்கல் செய்துள்ளனர் என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்கையில், வாதிகள்/மனுதாரர்களால் வண்டித்தட வசதியுரிமை குறித்து விளம்புகை, விளைவுறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. மேலும் இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு, தாவா சொத்தை பார்வையிட்டு, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் மேற்படி தாவா தடவழியை மனுதாரர்கள் பயன்படுத்துவதற்கு தொடர்ந்து தடை செய்து வருவதாகவும், அதனால் அசல் வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.03/2024 மனுவில் விசாரணை நடத்த

வேண்டி அசல் வழக்கை முன்னொரு தேதிக்கு முன்கொணர்வு செய்ய கோரியுள்ளது தெரியவருகிறது.

(iv) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்டுரைகள் மறுத்துள்ள போதிலும், மேற்படி இ.ம.எண்.03/2024 ஐ 19.03.2025 ம் தேதியிலிருந்து முன்கொணர்வு செய்வதால் தங்களுக்கு என்ன பாதிப்பு ஏற்படும் என்பது குறித்து எவ்வித சங்கதிகளையும் தெரிவிக்கவில்லை என தெரியவருகிறது. மேலும் மேற்படி இ.ம.எண்.03/2024 முன்கொணர்வு செய்யப்பட்டாலும் கூட, எதிர்மனுதாரர்களுக்கு தங்கள் தரப்பை எடுத்துரைக்க போதிய அவகாசம் வழங்கப்படும் என்பதை கருத்தில் கொள்கையிலும், எதிர்மனுதாரர்களின் எதிர்வாதத்திற்கு எவ்வித குந்தகமும் ஏற்படாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(v) எனவே மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கும், அதிலுள்ள இடைநிலை மனுக்களும் 19.03.2025 ம் தேதியில் வாய்தா நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் இன்றைய தேதியிலோ அல்லது குறுகிய கால கட்டத்திற்குள் ஏதேனும் முந்தைய தேதிகளில் அசல் வழக்கை முன்னெடுப்பு செய்து வாய்தா நிர்ணயிக்கப்படுவதால் எதிர்தரப்பினர்களுக்கு எவ்வித பாதகமான சூழ்நிலையும் ஏற்பட போவதில்லை என்பதால், இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vi) மேற்படி சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொள்கையில், அசல் வழக்கும், இடைநிலை மனுக்களும் எதிர்வரும் 19.03.2025 ம் தேதியிலிருந்து 07.03.2025 ம் தேதிக்கு முன் கொணர்வு செய்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. வழக்கு முன்னெடுப்பு நாள்.07.03.2025 ஆக நிர்ணயிக்கப்படுகிறது. தரப்பினர்கள் ஆஜராக உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2025.03.06 11:03:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2025.03.06 11:03:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.